## 19 நான்மாடக்கூடலானபடலம்

சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலை அறியாத கடலின் தலைவனான வருணன் அளவிலாத கோபம் கொண்டு, இடி யிடித்து பெரு மழை பொழியச் செய்தான். பாண்டியன் மக்கள் புடைச் சூழ ஈசனின் மலரடியில் வீழ்ந்தான்.

சோமசுந்தரக் கடவுள் தனது சடா முடியிலிருந்து மேகளையும் நான்கு மாடங்களாக்கி இடைவெளியின்றி மதுரை மாநகர் முழுவதையும் மூடிக்கொள்ளும் படி செய்தார். மக்கள் அனைவரும் மழையின் பாதிப்பின்றி இன்பக்கடலில் ஆழ்ந்தனர்.

தன்னுடைய தவற்றை உணர்ந்த வருண தேவன் பொற்றாமரை குளத்தில் நீராடி சோமசுந்தரக் கடவுளை முறையோடு பூஜித்து, இந்திரனின் கட்டளையால் தான் இவ்வாறு செய்ததாக் கூறினான். அவனது பூஜையில் மகிழ்ந்த ஈசன் அவன் வேண்டும் வரத்தை வினவ, தன்னுடைய பிழைகளை மன்னித்து, தன் வயிற்றுவலியை நீங்க அருள வேண்டினான்

ஈசனிடம் வரம் பெற்ற வருணன் வயிற்றுவலி நீங்கி மகிழ்ச்சியுடன் தன்னுடைய நகரமடைந்தான்

நான்கு மேகங்களும் நான்கு மலைகளைப் போல் வளர்ந்து நின்றன. அன்று முதல் மதுரை மாநகர் நான்மாடக் கூடல் எனஅழைக்கப்பட்டது.

### பல்லவி

கோபம் கொண்ட வருணன் ஏழுமேகங் கொண்டு கடலை
வற்றச் செய்த பின் மழை பெய்து மதுரையை அழிக்கச் சொன்னான்

### அனுபல்லவி

தாபமகற்றிடவே நான்கு மேகத்தால் மதுரையைச் சுற்றி
மாடங்களாக்கி நகரை நான்மாடக் கூடமாக்கினீர்

### சரணம்

நாணம் மிகுந்த வருணன் பொற்றாமரைக் குளத்தில்,
ஸ்நானம் செய்து தன் வயிற்று நோய் நீங்கிட
காணகளிப் புடனே உன்னைப் பூசித்தவனுக்கு
காட்சியளித்து கருணை செய்தாய்